உலகெங்கும் விற்பனையில் மகத்தான சாதனைகள் புரிந்துள்ள புத்தகம்

60 லட்சம்
பிரதிகள்
விற்பனை

# பிரம்மாண்டமான சிந்தனையின் மாயாஜாலம்

அதிகப் பணம் சம்பாதிக்கவும், துணிச்சலுடன்
தலைமையேற்று வழிநடத்தவும்,
மகிழ்ச்சியுடன் வாழவும் வழிகாட்டும் கையேடு

தமிழில்: நாகலட்சுமி சண்முகம்

டேவிட் ஷுவார்ட்ஸ் பிஎச்.டி

Tamil translation of the classic bestseller *The Magic of Thinking Big*

# 1

# உங்களால் வெற்றி பெற முடியும் என்று நம்புங்கள், அப்போது வெற்றி நிச்சயம்

வெற்றி என்பது பல அற்புதமான, நேர்மறையான விஷயங்களைக் குறிக்கும். ஓர் அருமையான வீடு, உல்லாச விடுமுறைகள், பயணங்கள், புதிய பொருட்கள், பொருளாதாரப் பாதுகாப்பு, உங்கள் குழந்தைகளுக்கு உச்சபட்ச அனுகூலங்களைக் கொடுத்தல் போன்ற தனிப்பட்டச் செழிப்பு அவற்றில் ஒன்று. வெற்றி என்றால் அடுத்தவர் உங்களைக் கண்டு பிரமிக்கும்படி செய்வது, தலைமைத்துவப்பதவியைப் பெறுவது, உங்களுடைய தொழில்வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் மற்றவர்கள் உங்களை உயர்வாக மதிப்பது என்றும் பொருள்படும். வெற்றி என்பது சுதந்திரத்தையும் குறிக்கும்.

அதாவது, கவலைகள், பயங்கள், விரக்திகள், தோல்விகள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டிருப்பதும் வெற்றியாகும். வெற்றி என்றால் சுயமதிப்பு என்றும் அர்த்தம் உண்டு. வாழ்வில் தொடர்ந்து அதிக மகிழ்ச்சியையும் மனநிறைவையும் அனுபவிப்பதும், உங்களைச் சார்ந்துள்ளவர்களுக்கு அதிகமான நல்ல விஷயங்களைச் செய்ய முடியவதும்கூட வெற்றிதான்.

சாதனைதான் வெற்றி. அதுதான் வாழ்வின் இலக்கு!

ஒவ்வொரு மனிதனும் வெற்றியை விரும்புகிறான். வாழ்விலிருந்து சிறந்தவற்றைப் பெற வேண்டும் என்ற விருப்பம் எல்லோருக்கும் இருக்கிறது. சராசரிக்குக் கீழானதொரு வாழ்க்கையை வாழ யாரும் விரும்புவதில்லை. அதேபோல, தாங்கள் இரண்டாந்தரக்காரரர்கள் என்ற உணர்வையும் யாரும்

விரும்புவதில்லை. தாங்கள் அந்த இரண்டாந்தர வாழ்க்கையை வாழக் கட்டாயப்படுத்தப்படுவதையும் அவர்கள் விரும்புவதில்லை.

வெற்றியை உருவாக்குவதற்கான, நடைமுறையில் பெரிதும் செயல்படுத்தப்படக்கூடிய ஞானம், ‘நம்பிக்கையால் மலையைக்கூட நகர்த்திவிட முடியும்’ என்ற கூற்றில் அடங்கியுள்ளது. ஒரு மலையை உங்களால் நகர்த்த முடியும் என்று நீங்கள் உண்மையிலேயே நம்பினால், நிச்சயமாக அது உங்களால் முடியும். ஆனால் பலருக்கு அந்த நம்பிக்கை இருப்பதில்லை. அதன் விளைவாக, பலர் அதைச் செய்வதில்லை.

“‘மலையே, நகர்ந்து போய்விடு!’ என்று வெறுமனே கூறுவதன் மூலம் அந்த மலை அங்கிருந்து நகர்ந்து போகும்படி உங்களால் செய்ய முடியும் என்று நீங்கள் நினைப்பது அபத்தம். அது சாத்தியமே இல்லை,”

என்று ஏதோ ஒரு சமயத்தில் யாரேனும் கூறி நீங்கள் கேட்டிருக்கக்கூடும்.

இவ்விதத்தில் சிந்திக்கும் மக்கள், வெறுமனே ஆசைப்படுவதற்கும் உண்மையிலேயே நம்பிக்கை கொள்வதற்கும் இடையேயான வேறுபாட்டைப்
புரிந்து கொள்வதில்லை. அவர்கள் இவ்விரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்கின்றனர். ஒரு மலை ஓரிடத்திலிருந்து நகர்ந்து போக வேண்டும் என்று நீங்கள் வெறுமனே ஆசைப்படுவதன் மூலம் அதை உங்களால் நகர்த்த முடியாது என்பது உண்மைதான். வெறுமனே ஆசைப்படுவதன் மூலம் ஓர் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் உங்களால் தங்கிவிட முடியாது, ஒரு பெரிய பங்களாவிற்குள் உங்களால் குடிபெயர முடியாது, பெரிய அளவில் பணம் சம்பாதிக்க முடியாது. வெறுமனே ஆசைப்படுவதன் மூலம் ஒரு தலைமைத்துவப் பதவியை

உங்களால் அடைந்துவிட முடியாது.

ஆனால் நம்பிக்கையின் உதவியோடு ஒரு மலையை உங்களால் நிச்சயமாக நகர்த்த முடியும். உங்களால் வெற்றி பெற முடியும் என்று நம்புவதன் மூலம் நிச்சயமாக உங்களால் வெற்றி பெற முடியும்.

நம்பிக்கையின் சக்தியில் எந்த மர்மமும் இல்லை, எந்த மாயாஜாலமும் இல்லை.

‘நான் நேர்மறையானவன், என்னால் சாதிக்க முடியும்’, என்ற மனப்போக்குதான் நம்பிக்கை. அந்த மனப்போக்கு, ஒன்றைச்செய்வதற்கான சக்தியையும் திறமையையும் ஆற்றலையும் உருவாக்குகிறது. ‘என்னால் முடியும்’ என்று நீங்கள் நம்பும்போது, அதைச் செய்வதற்கான வழி தானாக உருவாகிறது.

தினமும் நாடு முழுவதிலும் பல இளைஞர்கள் புதிய வேலைகளில் சேர்ந்து தங்கள் தொழில்வாழ்க்கையைத் துவக்குகின்றனர். தங்கள் வேலையில் என்றேனும் ஒருநாள் தங்களால் உச்சத்தை அடைய முடியும், அதனோடு வரும் வெற்றியைத் தங்களால் அனுபவிக்க முடியும் என்று அவர்கள் ஒவ்வொருவரும் 'ஆசைப்படுகின்ற னர்'. ஆனால், தங்களால் சிகரத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கை இந்த இளைஞர்களில் பெரும்பாலானோருக்கு இருப்பதில்லை. எனவே, அவர்கள் தங்கள் தொழிவலாழ்க்கையில் சிகரத்தைத் தொடுவதில்லை. உயரே செல்வது சாத்தியமில்லை என்று அவர்கள் நம்புவதால், மாபெரும் உயரங்களுக்கு இட்டுச் செல்கின்ற நடவடிக்கைகளை அவர்கள் கண்டறிவதில்லை. அவர்களுடைய நடத்தை ஒரு

‘சராசரி’ நபரின் நடத்தையைப்போல இருந்துவிடுகிறது.

ஆனால், இந்த இளைஞர்களில் ஒருசிலர், தாங்கள் வெற்றி பெறுவோம் என்று உண்மையிலேயே நம்புகின்றனர். ‘நான் உச்சத்தை அடையப் போகிறேன்,’ என்ற மனப்போக்குடன் அவர்கள் தங்கள் வேலையை அணுகுகின்றனர். அவர்களுடைய நம்பிக்கை அவர்களை உச்சத்திற்கு இட்டுச் செல்கிறது. தாங்கள் வெற்றி பெறுவோம் என்றும், அது தங்களுக்குச் சாத்தியம்தான் என்றும் நம்புகின்ற அவர்கள், தங்கள் உயரதிகாரிகளின் நடத்தையை கவனிக்கின்றனர், அதை ஆய்வு செய்கின்றனர். வெற்றிகரமான மக்கள் எவ்வாறு பிரச்சனைகளை அணுகுகின்றனர், எவ்வாறு தீர்மானங்கள் மேற்கொள்கின்றனர் என்பதை அந்த இளைஞர்கள் கற்றுக் கொள்கின்றனர். வெற்றிகரமான

மக்களின் மனப்போக்குகளை அவர்கள் கவனிக்கின்றனர்.

தன்னால் சாதிக்க முடியும் என்று நம்புகின்ற ஒருவனுக்குத்தான் அதைச் சாதிப்பதற்கான வழி தெரிய வருகிறது.

எனக்குத் தெரிந்த ஓர் இளம்பெண், நடமாடும் வீடுகளை விற்பனை செய்த ஒரு விற்பனை நிறுவனத்தைத் துவக்கப் போவதாக இரண்டு வருடங்களுக்கு முன்பு தீர்மானித்தாள். அவள் அந்த முயற்சியை மேற்கொள்ளக்கூடாது என்றும், அத்தொழிலை அவளால் செய்ய முடியாது என்றும் பலர் அவளுக்கு அறிவுறுத்தினர்.

மூவாயிரம் டாலர்களுக்கும் குறைவான பணம் மட்டுமே அவளுடைய சேமிப்பில் இருந்தது. அந்த விற்பனை நிறுவனத்தைத் துவக்கத் தேவையான குறைந்தபட்ச மூலதனம் அவளுடைய

சேமிப்பைவிடப் பல மடங்கு அதிகம் என்று அவளிடம் கூறப்பட்டது.

“நீ துவக்கவிருக்கின்ற தொழிலில் கடும் போட்டி நிலவுகிறது.மேலும், நடமாடும் வீடுகளை விற்பனை செய்வதில் உனக்கு என்ன அனுபவம் இருக்கிறது? உன்னால் எப்படி ஒரு வியாபாரத்தை நிர்வகிக்க முடியும்?” என்று அவளுடைய அறிவுரையாளர்கள் அவளிடம் கேட்டனர்.

ஆனால் இப்பெண்ணுக்குத் தன்மீதும் தன் திறமையின்மீதும் பெரும் நம்பிக்கை இருந்தது. தன்னால் வெற்றி பெற முடியும் என்று அவள் உறுதியாக நம்பினாள். போதுமான மூலதனம் தன்னிடம் இல்லை என்பதையும், தான் துவக்கவிருந்த தொழிலில் ஏகப்பட்டப்போட்டி நிலவியது என்பதையும், தனக்கு அனுபவம் இல்லை என்பதையும் அவள் ஒப்புக் கொண்டாள்.

“ஆனால், நடமாடும் வீடுகள் தொழிற்துறை விரிவடையவிருக்கிறது என்று எனக்குக் கிடைத்த அனைத்து ஆதாரங்களும் காட்டுகின்றன. மேலும், நான் என்னுடைய போட்டியாளர்களை ஆய்வு செய்திருக்கிறேன். இந்நகரில் இத்தொழிலை நடத்துகின்ற எல்லோரையும்விட என்னால் சிறப்பாகச் செயல்பட முடியும் என்பதை நான் அறிவேன். நான் சில தவறுகள் செய்யக்கூடும், ஆனால் நான் விரைவில் உச்சத்தை அடைவேன்,” என்று அவள் கூறினாள்.

அவள் அவ்வாறே சாதித்துக் காட்டினாள். மூலதனம் கிடைப்பதில் அவளுக்கு அவ்வளவாக எந்தப் பிரச்சனையும் இருக்கவில்லை. தன்னால் இத்தொழிலில் வெற்றி பெற முடியும் என்று அவள் கொண்டிருந்த ஆணித்தரமான

நம்பிக்கை, இரண்டு முதலீட்டாளர்களை அவள்மீது நம்பிக்கை கொள்ள வைத்தது. இந்த முழுமையான நம்பிக்கையுடன், சாத்தியமற்றதாகக் கூறப்பட்ட அக்காரியத்தை அவள் செய்தாள். எந்த முன்பணமும் செலுத்தாமல், ஒருசில நடமாடும் வீடுகளைத் தனக்கு முன்கூட்டியே கொடுப்பதற்கு அத்தகைய வீடுகளை உற்பத்தி செய்த ஓர் உற்பத்தியாளரை அவள் சம்மதிக்க வைத்தாள்.

கடந்த ஆண்டில், சுமார் பத்து லட்சம் டாலர்கள் பெறுமானமுள்ள நடமாடும் வீடுகளை அவள் விற்பனை செய்தாள். “அடுத்த ஆண்டு, இருபது லட்சம் பெறுமானமுள்ள வீடுகளை நான் விற்பனை செய்வேன்,” என்று அவள் கூறினாள். வலிமையான நம்பிக்கை உங்களுக்கு இருக்கும்போது, சாத்தியமற்றதாகக் கூறப்படுகின்ற ஒன்றைச் செய்வதற்கான

வழிகளைக் கண்டுபிடிப்பதற்கு அது உங்களுடைய மனத்தைத் தூண்டும். உங்களால் வெற்றி பெற முடியும் என்று நீங்கள் நம்பும்போது, மற்றவர்கள் உங்கள்மீது நம்பிக்கை கொள்வதற்கு அது வழி வகுக்கும்.

பெரும்பாலான மக்கள் நம்பிக்கைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால் வெற்றிகரமான மக்கள் அதற்கு அளப்பரிய முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஒருசில வாரங்களுக்கு முன்பு, அமெரிக்காவின் மத்திய மேற்கு மாநிலம் ஒன்றைச் சேர்ந்த நெடுஞ்சாலைத் துறை அதிகாரி ஒருவர், ‘மலையை நகர்த்தும் அனுபவம் ஒன்றை என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

என்னுடைய அந்த நண்பர் இவ்வாறு கூறினார்: “கடந்த மாதம், எங்களுடைய நெடுஞ்சாலை உருவாக்கத் திட்டத்தின் ஒரு

பகுதியாக, எட்டுப் பாலங்களை வடிவமைப்பதற்கு எண்ணற்றப் பொறியியல் நிறுவனங்களுக்கு அறிவிப்பு அறிக்கைகளை எங்கள் துறையினர் அனுப்பி வைத்தனர். சுமார் ஐம்பது லட்சம் டாலர்கள் செலவில் அந்தப் பாலங்கள் கட்டப்பட வேண்டியிருந்தன. இப்பணித்திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் பொறியியல் நிறுவனத்திற்கு, அப்பாலங்களை வடிவமைத்துக் கொடுப்பதற்கு நான்கு சதவீதக் கமிஷன் தொகை வழங்கப்படும். அதாவது, இரண்டு லட்சம் டாலர்கள் பணம் அந்நிறுவனத்திற்குக் கிடைக்கும்.

“இதைப் பற்றி இருபத்தோரு பொறியியல் நிறுவனங்களுடன் நான் பேசினேன். அவற்றில் மிகப் பெரிய நான்கு நிறுவனங்கள் அக்கணமே தங்களுடைய திட்ட முன்வரைவுகளைத் தாக்கல் செய்வதென்று தீர்மானித்தன.

மற்றப் பதினேழு நிறுவனங்களும் சிறியவை. அவை ஒவ்வொன்றிலும் மூன்றிலிருந்து ஏழு பொறியாளர்கள் மட்டுமே இருந்தனர். எங்களுடைய பணித்திட்டத்தின் அளவு அந்தப் பதினேழு நிறுவனங்களில் பதினாறு நிறுவனங்களுக்குக் கிலி ஏற்படுத்தியதால், அவர்கள் அந்தப் பணித்திட்டத்தை ஆய்வு செய்துவிட்டு, இறுதியில், 'இது எங்களால் கையாள முடியாத அளவுக்கு மிகப் பெரிய பணித்திட்டமாகும். இதை எங்களால் செய்து முடிக்க முடிந்தால் நன்றாகத்தான் இருக்கும், ஆனால் இதை முயற்சி செய்வதில்கூட எந்தப் பயனும் இல்லை,' என்று கூறிவிட்டனர்.

"ஆனால் மூன்றே மூன்று பொறியாளர்களை மட்டும் கொண்டிருந்த அந்த மீதி ஒரு சிறிய நிறுவனம், எங்களுடைய பணித்திட்டத்தை கவனமாக ஆய்வு செய்துவிட்டு, 'எங்களால் இதைச்

செய்ய முடியும். நாங்கள் ஒரு திட்ட முன்வரைவை சமர்ப்பிக்கிறோம்,' என்று கூறினர். அவர்கள் அவ்வாறே செய்தனர். அவர்களுக்கு நாங்கள் அந்த வேலையை ஒதுக்கினோம்."

தங்களால் மலைகளை நகர்த்த முடியும் என்று நம்புகின்றவர்கள் அதைச் சாதிக்கின்றனர். தங்களால் முடியாது என்று நம்புகின்றவர்களால் அதை ஒருபோதும் சாதிக்க முடியாது. நம்பிக்கைதான் ஒன்றைச் சாதிப்பதற்கான சக்தியைத் தூண்டிவிடுகிறது.

உண்மையில், இந்த நவீன காலத்தில், நம்பிக்கையானது மலைகளை நகர்த்துவதைவிட மிகப் பெரிய விஷயங்களை சாதித்துக் கொண்டிருக்கிறது. இன்றைய விண்வெளி ஆய்வுகளில் உள்ள முக்கியஅம்சம், விண்வெளியை நம்மால் வெற்றி கொள்ள முடியும்

என்ற நம்பிக்கைதான். மனிதனால் விண்வெளியில் பயணம் செய்ய முடியும் என்ற உறுதியான, அசைக்கப்பட முடியாத நம்பிக்கை இல்லாவிட்டால், மேற்கொண்டு இந்த ஆய்வைத் தொடர்வதற்கான துணிச்சலும் ஆர்வமும் உற்சாகமும் நம்முடைய அறிவியல் அறிஞர்களுக்கு இருக்காது. புற்றுநோயை குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை, அந்நோயை குணப்படுத்துவதற்கான வழிகளை நிச்சயமாகக் கண்டுபிடிக்கும். தற்போது, இங்கிலாந்தையும் ஐரோப்பாவையும் இணைப்பதற்கு ஆங்கிலக் கால்வாய்க்குக் கீழே ஒரு கடலடிச் சுரங்கப்பாதை அமைக்கப்படுவதைப் பற்றிய பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இச்சுரங்கப்பாதை அமைக்கப்படுமா இல்லையா என்பது அப்பணித்திட்டத்திற்குப் பொறுப்பானவர்கள் அதன்மீது கொண்டிருக்கும் நம்பிக்கையைச்

சார்ந்துள்ளது.

மாபெரும் விளைவுகள்மீதான நம்பிக்கைதான் அனைத்துச் சிறந்த புத்தகங்களுக்கும் நாடகங்களுக்கும் அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கும் பின்னால் உள்ள உந்துசக்தியாகும். வெற்றியின்மீதான நம்பிக்கைதான் ஒவ்வொரு வெற்றிகரமான தொழிலையும் அரசியல் அமைப்பையும் பின்னாலிருந்து இயக்குகிறது. வெற்றிகரமான மக்களிடம் இருக்கின்ற ஓர் அடிப்படையான, இன்றியமையாத அம்சம், வெற்றியின்மீதான நம்பிக்கைதான்.

உங்களால் வெற்றி பெற முடியும் என்று உண்மையிலேயே நம்புங்கள், அப்போது நீங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவீர்கள்.

கடந்த பல ஆண்டுகளின் ஊடாக, பல்வேறு தொழில் முயற்சிகளிலும் வேலைகளிலும்

தோல்வியைத் தழுவியுள்ள பலருடன் நான் பேசி வந்துள்ளேன். தோல்விக்கான ஏராளமான காரணங்களையும் சாக்குப்போக்குகளையும் நான் கேள்விப்பட்டுள்ளேன். தோல்விகள் பற்றிய உரையாடல்கள் தொடரும்போது, குறிப்பிடத்தக்க ஒரு விஷயம் வெளிச்சத்திற்கு வருகிறது. தோல்வியைத் தழுவியுள்ளவர்கள் பேசும்போது, “உண்மையைக் கூற வேண்டும் என்றால், அது வேலை செய்யும் என்று நான் நினைக்கவில்லை,” என்றோ, “நான் அந்த வேலையைத் துவக்குவதற்கு முன்பாகவே அந்த வேலையை என்னால் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கவில்லை,” என்றோ, அல்லது “உண்மையில், அந்த முயற்சி வெற்றி பெறாததில் எனக்கு எந்த ஆச்சரியமும் இல்லை,” என்றோ சாதாரணமாகக் கூறுகின்றனர்.

“நான் அதை முயற்சிக்கிறேன்,

ஆனால் அது வேலை செய்யும் என்று எனக்குத் தோன்றவில்லை,” என்ற மனப்போக்கு எப்போதும் தோல்விக்கே வழி வகுக்கிறது.

நம்பிக்கையின்மை என்பது ஓர் எதிர்மறை சக்தியாகும். நம்முடைய மனம் ஒன்றை நம்ப மறுக்கும்போதோ அல்லது சந்தேகிக்கும்போதோ, அந்த நம்பிக்கையின்மையை ஆதரிக்கக்கூடிய ‘காரணங்களை’ நம் மனம் கவர்ந்திழுக்கிறது. சந்தேகம், நம்பிக்கையின்மை, தான் தோற்றுவிடுவோம் என்ற ஆழ்மனரீதியான நம்பிக்கை, தான் வெற்றி பெற வேண்டும் என்ற விருப்பம் இல்லாமை ஆகியவைதான் பெரும்பாலான தோல்விகளுக்கான முக்கியக் காரணங்களாகும்.

நீங்கள் சந்தேகத்தைப் பற்றி நினைத்தால், நீங்கள் நிச்சயமாகத் தோற்றுவிடுவீர்கள்.

நீங்கள் வெற்றியைப் பற்றி நினைத்தால், நீங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவீர்கள்.

ஓர் இளம் நாவலாசிரியை, எழுத்துலகில் தன்னுடைய எதிர்கால லட்சியங்களைப் பற்றி சமீபத்தில் என்னுடன் பேசினாள். அவளுடைய துறையில் மிக உயர்ந்த நிலையில் இருந்த ஓர் எழுத்தாளரைப் பற்றிய பேச்சு அப்போது எழுந்தது. “ஓ, அவர் ஓர் அற்புதமான எழுத்தாளர். அவர் அளவுக்கு என்னால் வெற்றி பெற முடியாது,” என்று அவள் கூறினாள்.

அந்தப் பிரபல எழுத்தாளரைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் என்பதால், அந்த இளம்பெண்ணின் மனப்போக்கு எனக்கு ஏமாற்றம் அளித்தது. அவள் குறிப்பிட்ட அந்த எழுத்தாளர் அவ்வளவு பெரிய புத்திசாலி அல்ல. அவர் ஓர் அறிவுஜீவியும் அல்ல. ஆனால் அவர் தன்மீது அளப்பரிய தன்னம்பிக்கை

கொண்டுள்ளார். தலைசிறந்த எழுத்தாளர்களில் தானும் ஒருவன் என்று அவர் நம்புகிறார். எனவே, அவர் ஒரு தலைசிறந்த எழுத்தாளரைப்போல நடந்து கொள்கிறார், சிறப்பாகச் செயல்படுகிறார்.

தலைவர்களுக்கு மதிப்புக் கொடுப்பது நல்லதுதான். நாம் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும், அவர்களை கவனிக்க வேண்டும், அவர்களை ஆய்வு செய்ய வேண்டும். ஆனால் நாம் அவர்களை வழிபடத் தேவையில்லை. அவரை உங்களால் முந்திச் செல்ல முடியும் என்று நம்புங்கள். அப்போது அவரைத் தாண்டி உங்களால் முன்னோக்கிச் செல்ல முடியும். இரண்டாந்தார மனப்போக்கைத் தங்களுக்குள் வளர்த்துக் கொள்பவர்களின் செயல்பாடுகள் எப்போதும் இரண்டாந்தரமானவையாகவே இருக்கும்.

அதை இப்படிப் பாருங்கள். வாழ்வில் நாம் எதைச் சாதிக்கிறோம் என்பதை முறைப்படுத்துவது நம்முடைய நம்பிக்கைதான். சராசரிக்கும் கீழானதொரு வாழ்க்கையில் உழன்று கொண்டிருக்கின்ற ஒருவனைப் பாருங்கள். தான் மிகச் சொற்ப மதிப்புக் கொண்டவன் என்று அவன் நம்புவதால், வாழ்விலிருந்து மிகக் குறைவானவற்றையே அவன் பெறுகிறான். பெரிய விஷயங்களைத் தன்னால் சாதிக்க முடியாது என்று அவன் நம்புவதால், அவனால் அவற்றைச் செய்ய முடிவதில்லை. தான் முக்கியமற்றவன் என்று அவன் நம்புவதால், அவன் செய்கின்ற எல்லாமே முக்கியத்துவமற்றவையாகவே இருக்கின்றன. நாட்கள் செல்லச் செல்ல, தன்மீது அவன் கொண்டுள்ள நம்பிக்கையின்மை, அவன் பேசுகின்ற விதத்திலும்,

நடக்கின்ற விதத்திலும், நடந்து கொள்கின்ற விதத்திலும் தன்னை வெளிக்காட்டிக் கொள்கிறது. அவன் இந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளாதவரை, அவன் தொடர்ந்து குறுகிக் கொண்டே போவான், அவனுக்குத் தன்மீதான மதிப்பு மேன்மேலும் குறைந்து கொண்டே இருக்கும். நாம் நம்மில் எதைப் பார்க்கிறோமோ, மற்றவர்களும் அதையே நம்மில் பார்க்கின்றனர் என்பதால், அவனைச் சுற்றி இருக்கின்றவர்களின் பார்வையில் அவன் மதிப்புக் குறைவானவனாகவே இருப்பான்.

தொடர்ந்து முன்னேறிக் கொண்டும் முன்னோக்கிச் சென்று கொண்டும் இருக்கின்ற ஒருவனைப் பாருங்கள். தான் அதிக மதிப்பு வாய்ந்தவன் என்று அவன் நம்புவதால், வாழ்விலிருந்து அதிகமானவற்றை அவன் பெறுகிறான். கடினமான, பெரிய

விஷயங்களைத் தன்னால் சாதிக்க முடியும் என்று அவன் நம்புவதால், அவன் அவற்றைச் செய்து முடிக்கிறான். மக்களின் நடுவே அவன் தன்னைக் கையாளும் விதம், அவனுடைய நடத்தை, அவனுடைய எண்ணங்கள், அவனுடைய கருத்துக் கண்ணோட்டங்கள் போன்ற, அவனைப் பற்றிய எல்லாமே அவன் ஒரு தொழில்முறையாளன் என்றும் அவன் ஒரு முக்கியமான நபர் என்றும் கூறுகின்றன.

ஒருவனுடைய எண்ணங்கள் எப்படி இருக்கின்றனவோ, அவன் அப்படியே இருக்கிறான். எண்ணங்கள்தான் ஒருவனுடைய நிலையைத் தீர்மானிக்கின்றன. பிரம்மாண்டமான நம்பிக்கை கொள்ளுங்கள். முன்னோக்கிச் செல்வதற்கு உங்கள் மனப்போக்கை முறைப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களால் வெற்றி பெற முடியும் என்ற நேர்மறையான, உண்மையான நம்பிக்கையுடன்

வெற்றிக்கு உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள். பிரம்மாண்டமாக சிந்தித்து பிரம்மாண்டமான அளவில் வளருங்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, டெட்ராய்ட் நகரில் தொழிலதிபர்கள்அடங்கிய ஒரு குழுவின் சந்திப்புக்கூட்டத்தில் நான் பேசி முடித்தப் பிறகு, ஒரு கண்ணியமான நபர் என்னை அணுகித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். “உங்களுடைய சொற்பொழிவை நான் மிகவும் ரசித்தேன். நீங்கள் எனக்காக ஒருசில நிமிடங்கள் ஒதுக்க முடியுமா? என்னுடைய தனிப்பட்ட அனுபவம் ஒன்றை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்,” என்று அவர் கூறினார்.

நாங்கள் ஒரு காபி கடையில் வசதியாக அமர்ந்து கொண்டு,

எங்களுடைய ஆர்டர் வருவதற்காகக் காத்திருந்தோம்.

அப்போது அவர் பேசத் தொடங்கினார். “உங்கள் மனம் உங்களுக்கு எதிராகச் செயல்படுவதற்கு அதை அனுமதிப்பதற்கு பதிலாக, அது உங்களுக்குச் சாதகமாகச் செயல்படும்படி செய்வது எப்படி என்பதைப் பற்றி இன்று மாலை நீங்கள் பேசிய விஷயங்களோடு கச்சிதமாகப் பொருந்துகின்ற ஒரு தனிப்பட்ட அனுபவம் எனக்குக் கிடைத்தது. வாழ்வில் ஒரு கீழ்மட்ட நிலையில் இருந்த நான் எப்படி அதிலிருந்து மீண்டு ஓர் உயர்ந்த நிலையை அடைந்தேன் என்பதை இதுவரை நான் யாரிடமும் விளக்கியதில்லை. ஆனால் அதைப் பற்றி நான் உங்களுடன் பேச விரும்புகிறேன்.”

“அதைக் கேட்க நான் மிகவும் ஆவலாக இருக்கிறேன்,” என்று

நான் கூறினேன்.

“ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, தொழிற்கருவிகளை உருவாக்கும் ஒரு வர்த்தகத்தில் நான் ஒரு சாதாரண வேலையில் இருந்தேன். நான் ஒரு சராசரியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தேன். ஆனால் நான் கனவு கண்டிருந்த ஒரு கச்சிதமான வாழ்க்கைக்கு வெகு அப்பாற்பட்டதாக இருந்தது அது. எங்கள் வீடு மிகச் சிறியதாக இருந்தது. நாங்கள் வாங்க விரும்பிய பொருட்களை வாங்குவதற்கான பணம் எங்களிடம் இருக்கவில்லை. என் மனைவி இது பற்றி அவ்வளவாகக் குறையேதும் கூறவில்லை. ஆனால், இதுதான் தன் தலைவிதி என்று அவள் ஏற்றுக் கொண்டிருந்தாள் என்பதையும், அவள் மகிழ்ச்சியாக இல்லை என்பதையும் அவளுடைய முகம் தெளிவாகக் காட்டிக் கொடுத்தது. உள்ளுக்குள் நான் மேன்மேலும்

திருப்தியற்றவனாகஆகிக் கொண்டிருந்தேன். என்னுடைய மனைவிக்கும் என்னுடைய இரண்டு குழந்தைகளுக்கும் ஒரு நல்ல வாழ்க்கையை என்னால் அமைத்துக் கொடுக்க முடியவில்லை என்பதை நான் கண்டபோது, உள்ளூர நான் மிகவும் வேதனைப்பட்டேன்.

“ஆனால் இன்று, விஷயங்கள் முற்றிலும் வித்தியாசமாக ஆகியுள்ளன. இரண்டு ஏக்கர் பரப்பளவில் அமைந்த ஓர் அழகான வீட்டில் இப்போது நாங்கள் வசித்துக் கொண்டிருக்கிறோம். இங்கிருந்து வடக்கே இருநூறு மைல் தொலைவில் இன்னொரு வீடு எங்களுக்கு இருக்கிறது. எங்கள் குழந்தைகளை ஒரு நல்ல கல்லூரிக்கு அனுப்பிப் படிக்க வைக்க முடியுமா என்ற கவலை இப்போது எங்களுக்கு இல்லை. தனக்கென்று புதிய ஆடைகள் வாங்குவதற்குப் பணம் செலவழிப்பது பற்றி என் மனைவி

இனிமேல் எந்தக் குற்றவுணர்வும் கொள்ள வேண்டியதில்லை. அடுத்தக் கோடை விடுமுறையில், நாங்கள் எங்கள் குடும்பத்தோடு ஐரோப்பாவில் ஒரு மாதத்தைச் செலவிடவிருக்கிறோம். நாங்கள் உண்மையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.”

“இவையெல்லாம் எப்படி நிகழ்ந்தன?” என்று நான் கேட்டேன்.

‘நம்பிக்கையின் சக்தியைப் பயன்படுத்துங்கள்’ என்று இன்று மாலையில் உங்கள் உரையில் நீங்கள் குறிப்பிட்டீர்கள், இல்லையா? அந்த நம்பிக்கையின் சக்தியை நான் பயன்படுத்தியபோது என் வாழ்க்கை இப்படி மாறியது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, டெட்ராய்ட் நகரில் ஒரு தொழிற்கருவி உற்பத்தி நிறுவனத்தில் ஒரு வேலை வாய்ப்பைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். அந்த சமயத்தில் நாங்கள்கிளிவ்லேண்டில் வாழ்ந்து

கொண்டிருந்தோம். இப்புதிய வேலையில் சம்பளம் அதிகமாக இருந்ததால், அதை முயற்சித்துப் பார்ப்பதென்று நான் தீர்மானித்தேன். ஒரு ஞாயிறன்று மாலையில் நான் இங்கு வந்தேன். ஆனால் திங்கட்கிழமைதான் நேர்முகத் தேர்வு நடைபெறவிருந்தது.

“அன்றிரவு நான் உணவருந்திவிட்டு என் ஹோட்டல் அறையில் உட்கார்ந்திருந்தேன். என்ன காரணமோ தெரியவில்லை, என்மீது எனக்குக் கடும் வெறுப்பு ஏற்பட்டது. ‘நான் ஏன் இப்படி ஒரு தோல்வியாளனாக இருக்கிறேன்?’ சிறிதளவு முன்னேற்றத்தை மட்டுமே கொடுக்கவிருக்கின்ற இப்புதிய வேலையைப் பெற நான் ஏன் இவ்வளவு துடிக்கிறேன்? என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன்.

“அப்போது என்னையும் அறியாமல்

நான் ஒரு வெற்றுத் தாளை எடுத்து, பல ஆண்டுகளாக எனக்குப் பரிச்சயமான ஐந்து நபர்களின் பெயர்களை அதில் எழுதினேன். அவர்கள் என்னைவிட மிக அதிகப் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தனர், அதிகப் பொறுப்புகளை உள்ளடக்கிய வேலைகளில் இருந்தனர். அவர்களில் இருவர் முன்பு என்னுடைய அண்டைவீட்டுக்காரர்களாக இருந்தவர்கள். இன்னும் இருவர், என்னுடைய மேலதிகாரிகளாக இருந்தவர்கள். அந்த ஐந்தாவது நபர் என்னுடைய மனைவியின் சகோதரர்.

"அடுத்து, 'என்னுடைய இந்த நண்பர்கள் அனைவரும் என்னைவிடச் சிறந்த வேலைகளில் இருக்கின்றனர். ஆனால் இதைத் தவிர, என்னிடம் இல்லாத எது அவர்களிடம் இருக்கிறது?' என்று என்னை நானே கேட்டுக்

கொண்டேன். இக்கேள்வியைக் கேட்க எது என்னைத் தூண்டியது என்று இன்றுவரையிலும் எனக்குத் தெரியாது. அவர்களுடைய அறிவோடு என்னுடைய அறிவை நான் ஒப்பிட்டேன், ஆனால் உண்மையில் என்னைவிட அறிவில் அவர்கள் உயர்ந்தவர்களாக எனக்குத் தெரியவில்லை. கல்வி, நாணயம், தனிப்பட்டப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றிலும் நான் அவர்களைவிடச் சிறந்தவனாக இருந்தேன்.

“இறுதியில், வெற்றிக்கான ஒரு முக்கியமான அம்சம் அவர்களிடம் இருந்ததையும், அது என்னிடம் இல்லாததையும் நான் கண்டுபிடித்தேன்.‘தானாக முன்வந்து வலிய முயற்சி செய்வது’ என்ற அந்தப் பண்புநலனில் என் நண்பர்கள் என்னை வெகுவாக மிஞ்சியிருந்ததை நான் ஒப்புக் கொண்டாக வேண்டியிருந்தது.

“நான் இப்படி சிந்தித்துக் கொண்டிருந்தபோது அதிகாலை மூன்று மணி ஆகியிருந்தது. ஆனால் என் மனம் மிகத் தெளிவாக இருந்தது. முதன்முறையாக நான் என்னுடைய பலவீனத்தைப் பார்க்கத் தொடங்கியிருந்தேன். நான் முன்னேறாதபடி என்னை நானே இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்ததை நான் கண்டறிந்தேன். நான் எனக்குள் ஆழமாகச் சென்று என்னை ஆய்வு செய்தபோது, நான் அதிக மதிப்பு வாய்ந்தவன் என்ற நம்பிக்கை எனக்கு இல்லாததால்தான் வலிய முயற்சி செய்கின்ற பண்புநலன் என்னிடம் இல்லாமல் போனது என்பதை நான் கண்டறிந்தேன்.

“அன்றிரவு முழுவதும் நான் தூங்கவில்லை. என்மீது எனக்கு நம்பிக்கை இல்லாமல் இருந்தது எப்படி இத்தனைக் காலமாக என்மீது ஆதிக்கம் செலுத்தி வந்திருந்தது

என்பதையும், எனக்கு எதிராகச் செயல்படும்படி என் மனத்தை நான் எப்படிப் பயன்படுத்தியிருந்தேன் என்பதையும் பற்றி நான் அலசிக் கொண்டிருந்தேன். என்னால் ஏன் முன்னேற முடியும் என்பதற்கான காரணங்களைப் பார்ப்பதை விட்டுவிட்டு, என்னால் ஏன் முன்னேற முடியாது என்பதற்கான காரணங்களை எனக்கு நானே கூறி வந்திருந்ததை நான் கண்டுபிடித்தேன். என் சுயமதிப்பு மிகக் குறைவாக இருந்தது. என்னை நானே மட்டம் தட்டிக் கொண்டிருந்தது நான் செய்த எல்லா வேலைகளிலும் வெளிப்படையாகத் தெரிந்ததை நான் அறிந்து கொண்டேன். அப்போதுதான் ஒரு விஷயம் எனக்குப் புரிந்தது. என்னை நான் நம்பாதவரை, மற்ற யாரும் என்னை ஒருபோதும் நம்பப் போவதில்லை.

“அப்போது நான் ஒரு தீர்மானம் மேற்கொண்டேன். ‘நான்

இரண்டாந்தரமானவன் என்ற உணர்வை நான் அனுபவித்தது போதும். இக்கணத்திலிருந்து, என்னை நான் உயர்வாக மதிக்கப் போகிறேன்,' என்று நான் உறுதி பூண்டேன்.

"மறுநாள் காலையில் எனக்கு இன்னும் அந்தத் தன்னம்பிக்கை இருந்தது. என்னுடைய புதிய வேலைக்கான நேர்முகத் தேர்வில், நான் புதிதாகக் கண்டுபிடித்திருந்த என்னுடைய தன்னம்பிக்கையை முதன்முறையாக நான் சோதனைக்கு உட்படுத்தினேன். அந்த நேர்முகத் தேர்வுக்குச் செல்வதற்கு முன்பு, அப்போது நான் வாங்கிக் கொண்டிருந்த சம்பளத்தைவிட 750 டாலர்கள் அல்லது 1000 டாலர்கள் கூடுதல் சம்பளம் வேண்டும் என்று கேட்க நான் திட்டமிட்டிருந்தேன். அதற்கு மேல் கேட்க எனக்குத் துணிச்சல் இருக்கவில்லை. ஆனால், நான்

அதிக மதிப்புக் கொண்டவன் என்பதை நான் உணர்ந்து கொண்டதால், 3,500 டாலர்கள் கூடுதல் சம்பளம் வேண்டும் என்று நான் கேட்டேன். அந்நிறுவனத்தினர் எனக்கு அந்தச் சம்பளத்தை வழங்க ஒப்புக் கொண்டனர். முந்தைய இரவின்போது என்னை நான் சுய ஆய்வு செய்தபோது, மதிப்பு வாய்ந்த ஏராளமான விஷயங்கள் என்னிடம் இருந்ததை நான் கண்டுபிடித்திருந்ததுதான் நான் உயர்ந்த சம்பளத்தைக் கேட்டுப் பெறுவதைச் சாத்தியமாக்கியது.

“நான் அப்புதிய வேலையில் சேர்ந்து இரண்டு ஆண்டுகளில், அதிகமான வியாபாரத்தைப் பெற்றுத் தரக்கூடியவன் என்ற பெயர் எனக்குக் கிடைத்தது. அப்போது திடீரென்று பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது. இது என்னை மேலும் அதிக மதிப்பு வாய்ந்தவனாக ஆக்கியது. ஏனெனில், என்னுடைய

தொழிற்துறையில் மிக அதிக அளவில் விற்பனை செய்தவர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். எங்கள் நிறுவனம் மீண்டும் மறுசீரமைக்கப்பட்டபோது, மிக உயர்வான சம்பளம் எனக்கு வழங்கப்பட்டதோடு கூடவே, கணிசமானபங்குகளும் எனக்குக் கொடுக்கப்பட்டன.”

நீங்கள் உங்கள்மீது நம்பிக்கை கொள்ளும்போது, நல்ல விஷயங்கள் நிகழத் தொடங்குகின்றன. உங்கள் மனம் ஒரு “சிந்தனைத் தொழிற்சாலை ஆகும். மிகவும் சுறுசுறுப்பான அத்தொழிற்சாலை, தினமும் எண்ணற்ற எண்ணங்களை உற்பத்தி செய்கிறது.

உங்கள் சிந்தனைத் தொழிற்சாலையின் உற்பத்தி இரண்டு மேற்பார்வையாளர்களின் பொறுப்பில் இருக்கிறது. ஒருவரை வெற்றியாளர் என்றும்,

இன்னொருவரைத் தோல்வியாளர் என்றும் நாம் அழைக்கலாம். நேர்மறையான எண்ணங்களை உற்பத்தி செய்யும் பொறுப்பு வெற்றியாளருடையது. உங்களால் ஏன் சாதிக்க முடியும், நீங்கள் ஏன் தகுதிவாய்ந்தவராக இருக்கிறீர்கள் போன்றவற்றுக்கான காரணங்களை உற்பத்தி செய்வதில் திறமை பெற்றவர் அவர்.

இன்னொரு மேற்பார்வையாளரான தோல்வியாளர், எதிர்மறையான மற்றும் மறுத்துரைக்கும் எண்ணங்களை உற்பத்தி செய்கிறார். உங்களால் ஏன் ஒன்றைச் செய்ய முடியாது, நீங்கள் ஏன் பலவீனமாக இருக்கிறீர்கள், நீங்கள் ஏன் போதாதவராக இருக்கிறீர்கள் போன்றவற்றுக்கான காரணங்களை உருவாக்குவதில் அவர் வல்லவராக இருக்கிறார். 'நீங்கள் ஏன் தோற்பீர்கள்' என்பதற்கான காரணங்களை அவர் உங்களுக்குக்

கொடுப்பார். அது தொடர்பான எண்ணங்கள் உங்கள் மனத்தில் தொடர்ந்து உற்பத்தியாவதை உறுதி செய்வதில் வல்லவர் அவர்.

வெற்றியாளர், தோல்வியாளர் ஆகிய இருவருமே மிகுந்த கீழ்ப்படிதலைக் கொண்டவர்கள். அவர்கள் உங்கள் கட்டளைக்கு உடனே அடிபணிவார்கள். நீங்கள் அவர்களுக்கு ஒரே ஒரு சமிக்கை கொடுக்க வேண்டும், அவ்வளவுதான். அச்சமிக்கை நேர்மறையானதாக இருந்தால், வெற்றியாளர் முன்னே வந்து உங்கள் கட்டளையை நிறைவேற்றப் புறப்பட்டுவிடுவார். அதேபோல, ஓர் எதிர்மறைச் சமிக்கையானது தோல்வியாளரை முடுக்கிவிடும்.

இவ்விரு மேற்பார்வையாளர்களும் உங்கள் விஷயத்தில் எப்படி வேலை செய்கின்றனர் என்பதைப் பார்ப்பதற்கு இந்த எடுத்துக்காட்டை முயற்சித்துப் பாருங்கள். “இன்று

ஒரு மோசமான நாள்,” என்று உங்களுக்கு நீங்களே கூறிக் கொள்ளுங்கள். இது தோல்வியாளருக்குச் சமிக்கை அனுப்பி, அவரைத் தூண்டிவிடும். நீங்கள் கூறுவது சரிதான் என்பதை நிரூபிக்கும் விதமாக அவர் சில உண்மைகளை உற்பத்தி செய்வார். வெளியே மிகவும் சூடாகவோ அல்லது குளிராகவோ இருக்கிறது, வியாபாரம் இன்று மோசமாக இருக்கும், விற்பனை மிகவும் குறைந்துவிடும், மற்றவர்கள் பதற்றமடைவார்கள், நீங்கள் நோய்வாய்ப்படக்கூடும் என்று அவர் உங்களிடம் கூறுவார்.தோல்வியாளர் அளப்பரிய செயற்திறன் கொண்டவர். உங்கள் கூற்றை ஒருசில கணங்களில் அவர் உண்மையாக்கிவிடுவார். ‘இன்று ஒரு மோசமான நாள்’ என்று நீங்கள் கூறி முடித்தவுடன், அவர் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு, இன்றைய நாளை ஒரு மோசமான நாளாக அவர் ஆக்கிக் கொடுப்பார்.

அதற்கு பதிலாக, “இன்று ஓர் அருமையான நாள்,” என்று உங்களிடம் கூறிப் பாருங்கள். இது வெற்றியாளருக்குச் சமிக்கை அனுப்புகிறது. அவர் உடனடியாகச் செயலில் இறங்கிவிடுவார். “இன்று ஓர் அற்புதமான நாள். இன்று நல்ல வானிலை நிலவுகிறது. வாழ்க்கை சிறப்பானதாக இருக்கிறது. நீங்கள் செய்ய வேண்டிய ஒருசில வேலைகளை இன்று நீங்கள் செய்து முடிக்கலாம்,” என்று அவர் உங்களிடம் கூறுவார். அதன்படி, அன்றைய நாள் ஒரு நல்ல நாளாக உங்களுக்கு அமையும்.

உங்களால் ஒன்றை ஏன் சாதிக்க முடியாது என்பதைத் தோல்வியாளர் உங்களுக்குக் காட்டுவார்; ஆனால் உங்களால் சாதிக்க முடியும் என்பதை வெற்றியாளர் உங்களுக்குக் காட்டுவார். நீங்கள் தோற்றுவிடுவீர்கள் என்று தோல்வியாளர் உங்களை நம்ப

வைப்பார்; நீங்கள் ஏன் வெற்றி பெறுவீர்கள் என்பதை வெற்றியாளர் உங்களுக்கு விளக்கிக் காட்டுவார். ஒருவரை உங்களுக்குப் பிடிக்காமல் போவதற்கான காரணங்களைத் தோல்வியாளர் உருவாக்கிக் கொடுப்பார்; ஆனால் உங்களுக்கு ஏன் அவரைப் பிடிக்கும் என்பதற்கான காரணங்களை வெற்றியாளர் உங்களுக்குக் காட்டுவார்.

இவ்விரு மேற்பார்வையாளர்களுக்கும் நீங்கள் எவ்வளவுஅதிகமான வேலைகளைக் கொடுக்கிறீர்களோ, அவர்கள் அவ்வளவு அதிக வலிமை பெறுவார்கள். தோல்வியாளருக்கு நீங்கள் அதிகமான வேலைகளைக் கொடுத்தால், அவர் உங்கள் மனத்தில் அதிக இடத்தை ஆக்கிரமித்துக் கொள்வார். இறுதியில், உங்களுடைய ஒட்டுமொத்தச் சிந்தனை உற்பத்திப்

பிரிவையும் அவர் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துவிடுவார். பிறகு, அங்கு உற்பத்தியாகும் அனைத்து எண்ணங்களும் எதிர்மறையான இயல்பு கொண்டவையாகவே இருக்கும்.

தோல்வியாளரை வேலையைவிட்டு நீக்குவதுதான் நீங்கள் செய்யக்கூடிய ஒரே புத்திசாலித்தனமான விஷயமாகும். அவர் உங்களுக்குத் தேவையில்லை. உங்களால் முடியாது, நீங்கள் தகுதியானவர் அல்ல, நீங்கள் தோற்றுவிடுவீர்கள் போன்ற எதிர்மறைச் செய்திகளை அவர் உங்களிடம் கூறுவது உங்களுக்குத் தேவையற்றது. வாழ்வில் நீங்கள் எங்கே சென்றடைய விரும்புகிறீர்களோ, அங்கு நீங்கள் சென்றடைவதற்கு அவர் உங்களுக்கு உதவ மாட்டார். எனவே, அவரை உடனடியாக வெளியே தூக்கி எறிந்துவிடுங்கள்.

நூறு சதவீத நேரமும் வெற்றியாளரையே பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஏதேனும் ஓர் எண்ணம் உங்கள் மனத்திற்குள் நுழையும்போது, உங்களுக்காகச் செயல்படும்படி வெற்றியாளருக்குக் கட்டளையிடுங்கள். உங்களால் எப்படி வெற்றி பெற முடியும் என்பதை அவர் உங்களுக்குக் காட்டுவார்.

இக்கணத்திலிருந்து நாளைக்கு இதே நேரம்வரை, இன்னொரு 1,500 புதிய நுகர்வோர்கள் அமெரிக்காவிற்குள் நுழைந்திருப்பார்கள்.

மக்கட்தொகை ஓர் அசாதாரணமான வேகத்தில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அடுத்தப் பத்து ஆண்டுகளில், அது சுமார் 3 கோடி 50 லட்சம் அதிகரித்திருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஐம்பெரும்

நகரங்களான நியூயார்க், சிகாகோ, லாஸ் ஏஞ்சலீஸ், டெட்ராய்ட், பிலடெல்பியா ஆகியவற்றின் இப்போதைய மொத்த மக்கட்தொகைக்குச் சமம் அது. அப்படியென்றால், மக்கட்தொகை அதிகரிப்பு எந்த அளவுக்கு நிகழ்ந்திருக்கும் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள்.

புதிய தொழிற்துறைகள், புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள், விரிவடைந்து கொண்டிருக்கின்ற சந்தைகள் இவை எல்லாமே வாய்ப்புகளுக்கான களங்களாகும். இது ஒரு நல்ல செய்தி. வாழ்வதற்கான மிக அற்புதமான நேரம் இது!

ஒவ்வொரு துறையிலும் உயர்பதவிகளை வகிப்பதற்கு மக்கள் அதிக எண்ணிக்கையில் தேவைப்படுகின்றனர் என்று அனைத்துச் சமிக்கைகளும் உணர்த்துகின்றன. அதாவது,

மற்றவர்கள்மீது தாக்கம் ஏற்படுத்தக்கூடிய, அவர்களிடம் இருந்து வேலை வாங்கக்கூடிய, ஒரு தலைவராக இருந்து அவர்களை வழிநடத்திச் செல்லக்கூடிய அளப்பரிய திறன் கொண்ட மக்களுக்கான கிராக்கி அதிகமாக இருக்கும்.

இந்தத் தலைமைத்துவப் பதவிகளை நிரப்பக்கூடியவர்களில் நீங்களும் ஒருவர்.

வாய்ப்புகள் ஏராளமாக இருக்கும் என்பதற்கான உத்தரவாதம், தனிப்பட்ட வெற்றிக்கான உத்தரவாதம் அல்ல. பல்லாண்டு காலமாக, அமெரிக்கா எப்போதுமே கொழித்துக் வந்துள்ளது. ஆனால் யதார்த்தத்தில், லட்சக்கணக்கான மக்கள் உண்மையிலேயே பெரிதும் போராடிக் கொண்டிருக்கின்றனர், அவர்கள் வெற்றி பெறுவதில்லை என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. கடந்த இருபது

ஆண்டுகளாக அளப்பரிய வாய்ப்புகள் இருந்து வந்துள்ளபோதிலும், பெரும்பாலான மக்கள் சராசரிக்கும் கீழான ஒரு நிலையிலேயே உழன்று கொண்டிருக்கின்றனர். இனிவரும் காலகட்டங்களில் வாய்ப்புகள் அதிகரிக்கவிருக்கின்றன என்றாலும், பெரும்பாலான மக்கள் தொடர்ந்து கவலைப்பட்டுக் கொண்டுதான் இருப்பர், பயத்தோடுதான்வாழ்க்கையை ஓட்டுவர், தாங்கள் முக்கியமற்றவர்கள் என்ற எண்ணத்துடன் தட்டுத்தடுமாறி வாழ்க்கையை நடத்துவர். தங்களை யாரும் பாராட்டவில்லை என்ற நினைப்பு அவர்களுக்குள் மேலோங்கி இருக்கும். தாங்கள் செய்ய விரும்புவதை ஒருபோதும் செய்ய முடியாத நிலையில் அவர்கள் இருப்பர். அதன் விளைவாக, அவர்களுடைய செயற்திறன் குறையும். எனவே, அவர்கள் அற்பமான வெகுமதிகளையும்

அற்பமான மகிழ்ச்சியையுமே அடைவர்.

வாய்ப்புகளை வெகுமதிகளாக மாற்றிக் கொள்கின்ற மக்கள்தான் அறிவார்ந்தவர்கள். தங்கள் சிந்தனை மூலம் தங்களை வெற்றியாளர்களாக ஆக்கிக் கொள்வது எப்படி என்பதை அவர்கள் அறிந்திருக்கின்றனர். (நீங்களும் அவர்களில் ஒருவர் என்று நான் நம்புகிறேன். இல்லையென்றால், நீங்கள் வெறுமனே அதிர்ஷ்டத்தை மட்டும் நம்பிவிட்டு, இப்புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்க மாட்டீர்கள்.)

வெற்றிக்கான கதவு முன்பு எப்போதையும்விட மிக அகலமாகத் திறந்திருக்கிறது. அதன் வழியாக வீறுநடை போட்டுச் செல்லுங்கள். வாழ்விலிருந்து தாங்கள் பெற விரும்புகின்ற அனைத்தையும் பெற்றுக் கொண்டிருக்கின்ற அந்த ஒருசில மக்கள் அடங்கிய அந்தச்

சிறப்புக் குழுவில் நீங்களும் இணைந்து கொள்ளப் போவதாக இக்கணமே உறுதி பூணுங்கள்.

வெற்றியை நோக்கி நீங்கள் எடுத்து வைக்க வேண்டிய முதல் அடி இது. இதுதான் அடிப்படை நடவடிக்கையாகும். இதை உங்களால் தவிர்க்க முடியாது. முதல் நடவடிக்கை: உங்கள்மீது நம்பிக்கை கொள்ளுங்கள், உங்களால் வெற்றி பெற முடியும் என்று நம்புங்கள்.

**நம்பிக்கையின் சக்தியை உருவாக்கிக் கொள்வது எப்படி**

நம்பிக்கையின் சக்தியைக் கைவசப்படுத்துவதற்கும் அதை வலுப்படுத்துவதற்குமான மூன்று வழிகாட்டிகள் இவை:

தோல்வியைப் பற்றி சிந்திப்பதை விட்டுவிட்டு, வெற்றியைப் பற்றி சிந்தியுங்கள். உங்கள் வேலையிலும் சரி, உங்கள் வீட்டிலும்

சரி, தோல்வி குறித்த சிந்தனையை விட்டுவிட்டு, வெற்றி குறித்த சிந்தனையில் ஈடுபடுங்கள். நீங்கள் ஒரு கடினமான சூழ்நிலையை எதிர்கொள்ளும்போது, “நான் தோற்றுவிடுவேன்,” என்று சிந்திப்பதற்கு பதிலாக, “நான் வெற்றி பெறுவேன்,” என்று சிந்தியுங்கள். நீங்கள் ஒருவரோடு போட்டியிடும்போது, “நான் அவருக்கு எவ்விதத்திலும் சமமானவன் அல்ல,” என்று நினைப்பதற்கு பதிலாக, “நான் சம அளவில் சிறந்தவன்,” என்று நினையுங்கள். உங்களுக்கு ஓர் அற்புதமான வாய்ப்புக் கிடைக்கும்போது, “என்னால் சாதிக்க முடியாது” என்று நினைப்பதற்கு பதிலாக, “இதை என்னால் சாதித்துக் காட்ட முடியும்,” என்று சிந்தியுங்கள். “நான் வெற்றி பெறுவேன்,” என்ற உச்சகட்ட எண்ணம் உங்கள் சிந்தனைச் செயல்முறையின்மீது ஆதிக்கம்

செலுத்தும்படி செய்யுங்கள். வெற்றியைப் பற்றி சிந்திப்பது, வெற்றியை உற்பத்தி செய்து கொடுக்கின்ற திட்டங்களை உருவாக்குவதற்கு உங்கள் மனத்தைத் தயார்படுத்துகிறது. தோல்வியைப் பற்றி சிந்திப்பது இதற்கு நேரெதிரானதைச் செய்கிறது. தோல்வியைப் பற்றி சிந்திப்பது, தோல்வியை உற்பத்தி செய்கின்ற பிற எண்ணங்களை சிந்திக்க உங்கள் மனத்தைப் பழக்கப்படுத்துகிறது.

நீங்கள் நினைப்பதைவிட நீங்கள் சிறந்தவர் என்று அடிக்கடி உங்களுக்கு நீங்களே நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். வெற்றியாளர்கள் அனைவரும் சூப்பர்மேன்கள் அல்ல. வெற்றி பெறுவதற்கு நீங்கள் அதிபுத்திசாலியாக இருக்க வேண்டியதில்லை. வெற்றியில் எந்த மர்மமும் இல்லை. அது அதிர்ஷ்டத்தைச் சார்ந்ததும் அல்ல.

வெற்றிகரமான மக்கள் அனைவரும் தங்கள்மீதும் தாங்கள் செய்கின்றவற்றின்மீதும் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டுள்ள சாதாரணமான மக்களே. உங்களை நீங்களே ஒருபோதும் குறைத்து மதிப்பிட்டுவிடாதீர்கள்.

பிரம்மாண்டமான விஷயங்கள்மீது நம்பிக்கை வையுங்கள். உங்கள் நம்பிக்கையின் அளவுதான் உங்கள் வெற்றியின் அளவைத் தீர்மானிக்கிறது. நீங்கள் சிறிய இலக்குகளைப் பற்றி சிந்தித்தால், சிறிய சாதனைகளை மட்டுமே உங்களால் எதிர்பார்க்க முடியும். பெரிய இலக்குகளைப் பற்றி நீங்கள் சிந்திக்கும்போது, நீங்கள் பெரிய வெற்றிகளைப் பெறுவீர்கள். பிரம்மாண்டமான யோசனைகளும் பிரம்மாண்டமான திட்டங்களும் சிறிய யோசனைகளையும் சிறிய திட்டங்களையும்விட அதிகக் கடினமானவை அல்ல, அவை

பெரும்பாலும் சுலபமானவையாகவே இருக்கின்றன என்பதையும் நினைவில் வைத்திடுங்கள்.

ஜெனரல் எலெக்ட்ரிக் நிறுவனத்தின் இயக்குனர் குழுமத் தலைவரான ரால்ஃப் ஜே. கார்டினர் ஒரு தலைமைத்துவக் கருத்தரங்கில் இவ்வாறு கூறினார்: “தனக்காகவும் தன்னுடைய நிறுவனத்திற்காகவும் ஒரு தலைமைத்துவப் பதவியைக் கைவசப்படுத்த ஆர்வம் கொண்டுள்ள ஒவ்வொரு நபரும் சுயவளர்ச்சிக்கான ஒரு தனிப்பட்டப் பயிற்சித் திட்டத்தை மேற்கொள்ள உறுதி பூண வேண்டும். ஒருவன் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று யாரும் அவனுக்குக் கட்டளையிடப் போவதில்லை. ஒருவன் ஒரே இடத்தில் தேக்கமடைந்து நிற்பதோ, அல்லது தன்னுடைய துறையில் முன்னேறிச் செல்வதோ

அவனுடைய சொந்த முயற்சியின் விளைவே. இதற்கு நேரமும் உழைப்பும் தியாகமும் தேவை. நீங்கள்தான் அதைச் செய்தாக வேண்டும். வேறு யாராலும் அதை உங்களுக்காகச் செய்ய முடியாது.”

கார்டினரின் அறிவுரை ஆழமானது, நடைமுறையில் செயல்படுத்தத்தக்கது. வணிக மேலாண்மை, விற்பனை, பொறியியல், மதம் சார்ந்த வேலை, எழுத்துப் படைப்பு, நடிப்பு மற்றும் பிற துறைகளில் உயர்ந்த நிலைகளை அடைகின்ற மக்கள், சுயவளர்ச்சிக்கான ஒரு திட்டத்தை முறையாகவும் தொடர்ச்சியாகவும் பின்பற்றுவதன் மூலம் அந்நிலைகளை அடைகின்றனர்.

எந்தவொரு பயிற்சித் திட்டமும் மூன்று விஷயங்களைச் செய்ய வேண்டும். ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் அதில் இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, அதை எப்படிச் செய்ய வேண்டும் என்ற ஒரு வழிமுறையை அது கொடுக்க வேண்டும். மூன்றாவதாக, அது அமிலப் பரிசோதனைக்கு உட்பட்டாக வேண்டும். அதாவது, அது விளைவுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இப்புத்தகம் துல்லியமாக அம்மூன்றையும்தான் செய்கிறது.

வெற்றிக்கான

உங்களுடைய தனிப்பட்டப் பயிற்சித் திட்டத்தில் நீங்கள் செய்யவிருக்கின்ற விஷயம் வெற்றிகரமான மக்களின் மனப்போக்குகள் மற்றும் உத்திகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. வெற்றிகரமான மக்கள் எப்படித் தங்களை நிர்வகிக்கின்றனர்? முட்டுக்கட்டைகளிலிருந்து அவர்கள் எப்படி மீண்டெழுகின்றனர்? மற்றவர்களின் மதிப்பை அவர்கள் எப்படிச் சம்பாதிக்கின்றனர்? சாதாரணமான நபர்களிடமிருந்து

எது அவர்களைத் தனித்துவப்படுத்துகிறது? அவர்கள் எவ்வாறுசிந்திக்கின்றனர்?

உங்களுடைய வளர்ச்சித் திட்டத்தில் நீங்கள் செய்யவிருக்கின்ற விஷயம் எப்படிச் செய்யப்பட வேண்டும் என்பது திட்டவட்டமான செயல்நடவடிக்கைகளாக வரையறுக்கப்பட்டுள்ளது. இவற்றை ஒவ்வோர் அத்தியாயத்திலும் நீங்கள் காணலாம். இந்த வழிமுறைகள் நிச்சயமாகப் பலனளிக்கின்றன. அவற்றை உங்கள் வாழ்வில் செயல்படுத்தி, நீங்களே அவற்றைச் சோதித்துக் கொள்ளுங்கள்.

பயிற்சியின் மிக முக்கியப் பகுதி ‘விளைவுகள்.’ இந்நூலில்கொடுக்கப்பட்டுள்ள பயிற்சித் திட்டத்தை நீங்கள் அர்ப்பணிப்போடு தொடர்ந்து நடைமுறையில் செயல்படுத்தி வந்தால், அது நிச்சயமாக

உங்களுக்கு வெற்றியைக் கொண்டுவரும். உங்களுக்குக் கிடைக்கும் வெற்றி, இப்போது உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு பிரம்மாண்டமான அளவில் இருக்கும். உங்களுடைய தனிப்பட்டப் பயிற்சித் திட்டம் பல தொடர்ச்சியான வெகுமதிகளை உங்களுக்குப் பெற்றுக் கொடுக்கும். உங்கள் குடும்பத்தினர் உங்களை ஆழமாக மதிப்பர்; உங்கள் நண்பர்களும் கூட்டாளிகளும் உங்களைக் கண்டு பிரமிப்பர்; மற்றவர்களுக்குப் பயனுள்ளவராகவும் குறிப்பிடத்தக்க ஒருவராகவும் நீங்கள் இருக்கிறீர்கள் என்ற உணர்வு உங்களுக்குள் மேலோங்கும்; நீங்கள் ஓர் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றிருப்பதுபோல நீங்கள் உணர்வீர்கள்; உங்கள் வருவாய் பெருமளவு அதிகரிக்கும்; உங்கள் வாழ்க்கைத்தரம் உயரும். இவையெல்லாம் உங்கள் தனிப்பட்ட வளர்ச்சிக்கான பயிற்சி

திட்டம்உங்களுக்குக் கொடுக்கக்கூடிய வெகுமதிகளாகும்.

உங்கள் பயிற்சியை நீங்கள்தான் மேற்கொண்டாக வேண்டும். யாரும் இங்கு உங்களைக் கண்காணிக்க மாட்டார்கள், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் கூற யாரும் இருக்க மாட்டார்கள். இந்நூல் உங்களுடைய வழிகாட்டியாக இருக்கும், ஆனால் இதில் கூறப்பட்டுள்ள விஷயங்களை நீங்களாகத்தான் புரிந்து கொள்ள வேண்டும். இப்பயிற்சியை நடைமுறையில் செயல்படுத்துவதற்கு நீங்கள்தான் உங்களுக்குக் கட்டளையிட்டாக வேண்டும். உங்களுடைய முன்னேற்றத்தை நீங்கள்தான் அளவிட்டாக வேண்டும். நீங்கள் எங்கேனும் தவறு செய்துவிட்டால், நீங்கள்தான் திருத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும். சுருக்கமாகக் கூறினால்,

மாபெரும் வெற்றிகளைப் பெறுவதற்கு உங்களை நீங்களே பயிற்றுவித்துக் கொள்ளப் போகிறீர்கள்.

நீங்கள் வேலை செய்வதற்கும் ஆய்வு செய்வதற்கும்தேவையான, அனைத்து வசதிகளுடனும்கூடிய ஒரு பரிசோதனைக்கூடம் ஏற்கனவே உங்களிடம் இருக்கிறது. உங்கள் பரிசோதனைக்கூடம் உங்களைச் சுற்றி எல்லா இடங்களிலும் இருக்கிறது. அது மனிதர்களை உள்ளடக்கிய ஒன்று. மனித நடவடிக்கைக்கான அனைத்து எடுத்துக்காட்டுகளும் அதில் உள்ளன. உங்களுடைய சொந்தப் பரிசோதனைக்கூடத்தில் உங்களை ஓர் அறிவியலறிஞராக நீங்கள் பார்க்கத் தொடங்கியவுடன், நீங்கள் கற்றுக் கொள்ளக்கூடிய விஷயங்களுக்கு எல்லையே இல்லை. இதில் சிறப்பு என்ன தெரியுமா? உங்கள் பரிசோதனைக்காக நீங்கள் எதையும்

வாங்கத் தேவையில்லை, வாடகை எதுவும் கொடுக்கத் தேவையில்லை. நீங்கள் எந்தவிதமான கட்டணமும் செலுத்தத் தேவையில்லை. இப்பரிசோதனைக்கூடத்தை நீங்கள் விரும்பும் விதத்தில் உங்களால் பயன்படுத்திக் கொள்ள முடியும் - முற்றிலும் இலவசமாக!

உங்கள் சொந்தப் பரிசோதனைக்கூடத்தின் இயக்குனர் என்ற முறையில், ஓர் அறிவியல் அறிஞர் செய்கின்ற எல்லாவற்றையும் நீங்கள் செய்ய விரும்புவீர்கள். அதாவது, உங்களைச் சுற்றி நிகழ்கின்றவிஷயங்களை நீங்கள் கவனிக்கவும் ஆய்வு செய்யவும் விரும்புவீர்கள்.

தங்கள் வாழ்நாள் முழுவதும் மக்களால் சூழப்பட்டிருந்தும்கூட, மக்கள் ஏன் ஒரு குறிப்பிட்ட விதத்தில் நடந்து கொள்கின்றனர் என்பதைப் பற்றிய புரிதல்

பெரும்பாலான மக்களுக்குக் குறைவாகவே இருக்கிறது என்று நீங்கள் எப்போதேனும் வியந்தது உண்டா? உன்னிப்பாக கவனிப்பதற்குப் பெரும்பாலான மக்கள் பயிற்றுவிக்கப்படவில்லை. உங்களைச் சுற்றிலும் நடப்பவற்றை உன்னிப்பாக கவனிப்பதற்கும், மனிதச் செயல்பாடுகள் பற்றிய ஆழமான உள்நோக்குகளை உருவாக்கிக் கொள்வதற்கும் உங்களை நீங்களே பயிற்றுவித்துக் கொள்வதற்கு உங்களுக்கு உதவுவது இந்நூலின் ஒரு முக்கிய நோக்கமாகும். பின்வருவன போன்ற கேள்விகளை உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளக்கூடும்: “குமரன் கஷ்டப்பட்டு வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறான், ஆனால் ராமன் ஒரு பெரிய வெற்றியாளனாக இருக்கிறான். அது ஏன்?” “சிலருக்கு ஏராளமான நண்பர்கள் இருக்கின்றனர், ஆனால் மற்றவர்களுக்கு ஒருசில நண்பர்களே இருக்கின்றனர். அது

ஏன்?" "ஒரு விஷயத்தை ஒருவர் கூறும்போது மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்கின்ற மக்கள், அதே விஷயத்தை இன்னொருவர் கூறும்போது முற்றிலுமாகப் புறக்கணித்துவிடுவது ஏன்?"

நீங்கள் பயிற்சி பெற்றவுடன், உன்னிப்பாகக் கண்காணித்தல் என்ற எளிய செயல்முறையின் வாயிலாக மதிப்புவாய்ந்த பாடங்களை நீங்கள் கற்றுக் கொள்வீர்கள்.

உன்னிப்பாகக் கண்காணிப்பதில் திறமை பெற்றவராக ஆவதற்குஉங்களுக்கு உதவக்கூடிய இரண்டு சிறப்புப் பரிந்துரைகள் இவை. ஒரு சிறப்பு ஆய்விற்காக, மிகப் பெரிய வெற்றி பெற்றுள்ள ஒருவரையும், மிகப் பெரிய தோல்வியாளர் ஒருவரையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். பிறகு, நீங்கள் இப்புத்தகத்தைத் தொடர்ந்து படிக்கப் படிக்க,

உங்களுடைய வெற்றிகரமான நண்பர் எப்படி வெற்றிக் கொள்கைகளோடு இயைந்து செயல்படுகிறார் என்பதை உன்னிப்பாக கவனியுங்கள். எதிரெதிர்த் துருவங்களாக இருக்கின்ற இவ்விருநபர்களையும் ஆய்வு செய்வது, இந்நூலில் வரைகோடிட்டுக் காட்டப்பட்டுள்ள உண்மைகளைப் பின்பற்றுவது எவ்வளவு முக்கியம் என்பதை நீங்கள் பார்க்க உங்களுக்கு உதவுவதையும் கவனியுங்கள்.

நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு நபரும், வெற்றிக் கொள்கைகள் எப்படிச் செயல்படுகின்றன என்பதைப் பார்ப்பதற்கான ஒரு வாய்ப்பை உங்களுக்குக் கொடுக்கிறார். வெற்றிக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கைகளை ஒரு பழக்கமாக ஆக்கிக் கொள்வதுதான் உங்கள் குறிக்கோளாகும். நீங்கள் அப்பழக்கத்தை எவ்வளவு அதிகமாகப் பின்பற்றுகிறீர்களோ,

விரைவில் அது உங்களுடைய இரண்டாவது இயல்பாக ஆகி, உங்களுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கும்.

பொழுதுபோக்கிற்காகத் தாவரங்களை வளர்க்கின்ற நண்பர்கள் நம்மில் பெரும்பாலானோருக்கு இருக்கக்கூடும். “இந்தச் செடிகள் வளர்வதைப் பார்ப்பது உற்சாகமளிக்கிறது. தாவர உணவுக்கும் தண்ணிருக்கும் அவை செயல்விடை அளிக்கும் விதத்தைப் பார். கடந்த வாரம் வளர்ந்திருந்ததைவிட இன்று எவ்வளவு பெரிதாக இவை வளர்ந்திருக்கின்றன என்று பார்,” என்ற ரீதியில் அவர்கள் பேசி நாம் கேட்டிருப்போம்.

மனிதர்கள் இயற்கையுடன் கவனமாக ஒத்துழைக்கும்போது நிகழக்கூடியவற்றைப் பார்ப்பது உண்மையிலேயே

சுவாரசியமாகத்தான் இருக்கிறது. ஆனால், நீங்கள் உங்களுடைய சொந்தச் சிந்தனையை கவனமாகக் கையாண்டு, அதைத் திறமையாக நிர்வகிக்கும்போது, நீங்கள் நடந்து கொள்கின்ற விதத்தைப் பார்ப்பது அதைவிடப் பத்து மடங்கு அதிக சுவாரசியமானது. நீங்கள் அதிகத் தன்னம்பிக்கை கொண்டவராகவும், அதிகச் செயற்திறன் கொண்டவராகவும், நாளுக்கு நாள் அதிக வெற்றிகரமானவராகவும் ஆகிக் கொண்டிருக்கிறீர்கள் என்ற உணர்வை நீங்கள் அனுபவிப்பது பெரிதும் குதுரகலமூட்டக்கூடியது. வெற்றிக்கும் சாதனைக்கும் இட்டுச் செல்லக்கூடிய பாதையில் நீங்கள் பயணித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்திருப்பதைவிட அதிக மனநிறைவைக் கொடுக்கக்கூடியது இவ்வாழ்க்கையில் வேறு எதுவும் இல்லை. உங்களுடைய ஆற்றலையும் திறமைகளையும் முழுவதுமாகப்

பயன்படுத்துவதைவிடப் பெரிய சவாலான விஷயமும் வேறு எதுவும் இல்லை.